**செய்தி வெளியீடு எண்: 17** **நாள்: 10.01.13**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.அ. முஹம்மத்ஜான் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் 10.01.2013 அன்று சென்னையில் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தில் விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டுதல் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டு பணிகளை விரைந்து முடிக்க பொதுப்பணித் துறை அதிகாரிகளுக்கு தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டது. மேலும் இத்துறை மூலம் செயல்படுத்தப்படும் அனைத்து திட்டப் பணிகளையும் முனைப்புடன் செய்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையின மக்களுக்கு கடனுதவி வழங்குதல், வ க்பு வாரியம் மற்றும் உறஜ் கமிட்டியின் பணிகள், மற்றும் துறையின் பிற திட்டங்கள் குறித்து விரிவாக ஆய்வு செய்த மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து திட்டப் பணிகளையும் விரைந்து முடித்து பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதிக்குள் 100% பணிகளையும் முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

ஆய்வுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் அரசு செயலர் திரு. தங்க கலியபெருமாள், இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் இயக்குநர் முனைவர். மு. ராஜேந்திரன், இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத்துறை ஆணையர் திரு. எஸ். தங்கசுவாமி, இ.ஆ.ப., மற்றும் பொதுப்பணித்துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**